மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அப்படிப்பட்ட கல்லூரிகளில் அர்ச்சகர்களாவதற்கான தேர்ச்சியைப் பெறலாம், பெறுவதிலே தவறு இல்லை என்பதுதான் இந்த அரசை நடத்துகிற எங்களுடைய கொள்கையாகும். அதற்குக் கேரளத்திலும் ஒரு உதாரணம் இருப்பதாக எடுத்துக்காட்டியதற்கு நன்றி.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே 20-ஆம் நூற்றாண்டிலேகூட கோயில்களுக்குள்ளே நுழையும்பொழுது இடுப்பிற்குக் கீழே மட்டுந்தான் ஆடை இருக்கவேண்டும், இடுப்பிற்கு மேலே ஆடை இருக்கக்கூடாது என்று வற்புறுத்தப் படுகிறதே, இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதெல்லாம் கோயிலுக்குப் போகவேண்டியவர்கள் படவேண்டிய கவலை.

திரு. கே. விநயகம்: சார், நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் கூட இதையெல்லாம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலே எல்லா மக்களும், அர்ச்சனை செய்கிறவர்களும் போகலாம் என்று வைத்துவிட்டால் விக்ரகங் களுக்குப் போடப்பட்டிருக்கிற விலைமிகுந்த நல்ல ஆபரணங்கள் இருக்குமே ; இப்பொழுது ஒரு சாரார் அதற்குப் பொறுப் பேற்றிருக்கிறார்கள், களவுபோய்விட்டால் அவர்களைப் பிடிக்கலாம் தண்டிக்கலாம் என்று இருக்கிறதே, இந்த முறையை மாற்றி எல்லோரும் போகலாம் என்று சொன்னால்--ஆலிங்கனம் செய்யலாம் என்றுகூட சொல்லக்கூடும்--பாதுகாப்புக் கொடுப் பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோரும் போகலாம் என்பதற்கும் எல்லா வகுப்பினரும் போகலாம் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நான் சொன்னேன். சில கோயில்களில் நிறைய ஆபரணங்கள், அணிமணிகள், ஏராளமான சொத்துக்கள், இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கிற சிலைகள்கூட கோமேதகம், மரகதம் போன்ற விலையுயர்ந்த பொருள்களால் செய்யப்பட்டவையாக இருக்கின்றன. ஆகவே பொறுப்பாக அதிகாரம் பெற்றவர்கள்தான் செல்லவேண்டுமென்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. அப்படி அதிகாரம் பெற்றவர்களாக இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினராகத்தான் இருக்க வேண்டுமா என்பதற்குத்தான் இந்த அரசு விடைகாண விரும்புகிறது.

Arrests in train stopping incidents.

* 330 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of arrests have been made in this State in connection with the Communist Party of India agitation with train stopping incidents about the 27th May 1969; and

(*b*) if so, the details thereof?

1970 மார்ச் 12]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 27—5—1969-ஆம் தேதியன்று, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 11 பேரும், கோயம்புத்தூர் சந்திப்பில் 45 பேரும், மதுரை சந்திப்பில் 25 பேரும், ராஜபாளையம் ரயில் வண்டி நிலையத்தில் 18 பேரும், சேலம் சந்திப்பில் 12 பேரும், திருச்சிராப்பள்ளி சந்திப்பில் 27 பேரும், கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் கைதுசெய்யப்பட்டவர்கள் எப்பொழுது விடுதலை செய்யப்பட்டார்கள்? காலையில் கைது, மாலையில் விடுதலை என்ற கொள்கையை இந்த அரசாங்கம் தோழமைக் கட்சிக்காரர்களுக்கு மட்டும் கடைப்பிடிக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தோழமையாக இருக்கிற கட்சிகளுக்கு மாத்திரம் அல்ல. பிரச்சினைகளின் தன்மையை அனுதாபத்தோடு அணுகவேண்டுமென்ற முறையில் எல்லாப் பிரச்சினைகளிலும் இந்த அரசு அணுகுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் தமிழ்நாட்டிலே மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கவேண்டுமென்றுதான், அதற்காக மத்திய அரசாங்கத்தைக் கண்டிப்பதற்காகத்தான் நடத்தினார்கள். மத்திய அரசாங்கத்தைக் கண்டிப்பதற்காக நடத்திய காரணத்தினால்தான் இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு நடந்துகொண்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய சர்க்காரை எதிர்த்தார்கள் என்பதற்காக அல்ல. ஒரு பிரச்னை எந்தவகையிலே அணுகப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்த அரசு அவற்றினைத் தீர்மானிக்கிறது. பொதுவாகத் தொழிலாளர்கள் பிரச்னை, மாணவர்கள் பிரச்னை இவற்றில் உணவின் அடிப்படையில் பல காரியங்கள் நடைபெற்றால் அந்த உணர்வை மதித்து இந்த அரசு பல காரியங்களை நடத்திவருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : எத்தனை பஞ்சாலைகள் திறக்கப்பட்டன? எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளின் கணக்கு 27. அரசாங்கத்தினால் திறக்கப்பட்டவை 4; அரசின் உதவியோடு ஆலை உரிமையாளர்களால் திறக்கப்பட்டவை 7; அரசின் உதவியோடு தனியார் எடுத்துநடத்துவது 2; மேலும் அரசு நடத்த எண்ணியுள்ளது 2; ஆக 13 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு ஆலைகள் விரைவிலே திறக்கப்பட இருக்கின்றன. ஆலைகள் மூடப்பட்டதன் காரணமாக 13,000 தொழிலாளர்கள் வேலையிழந்தார்கள். அந்த 13,000 பேர்களில் 4,000 என்ற அளவுக்குத் தவிர, மற்ற 9,000 பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.